# குரு – சிஷ்ய பரம்பரை!



ப்ரக்ஞன்

# குரு – சிஷ்ய பரம்பரை!

**ப்ரக்ஞன்**

# குரு – சிஷ்ய பரம்பரை

ஹரி ஓம்

அனைவருக்கும் வணக்கம்,

இந்த உலகில் தோன்றி, இன்றைய நடைமுறையில் உள்ள பிற மதங்களை விட, மிக அதிகமாக, மனிதனை மகத்தானவனாக மாற்ற முயற்சித்த, மதங்களைக் கடந்த மனித நேயம் மிக்க, ஒரே கல்வி முறை ஒன்று உண்டென்றால், அது நமது பாரத தேசத்தின் சனாதன தர்மத்தின் வழியில் வந்த, பண்டைய ரிஷிகளின் வேதக் கல்வி மட்டுமே ஆகும்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் தோன்றிய நமது பாரத தேசத்தின் பண்டைய ரிஷிகளின் பண்பாடு மற்றும் கலாச்சாரம் எல்லாமே மனிதனை மகத்தான நிலைக்கு அழைத்துச் செல்கின்ற மிக உயரிய அறிவுப் பரிமாணத்தின் அடிப்படை திறவுகோல் எது என்றால், அது நமது வேதம் மட்டுமே ஆகும்.

இதிலே, நமது பண்டைய வேதங்களை எளிதாக எல்லோருக்கும் எளிய நடைமுறையில் கொண்டு வந்து சேர்த்தவர் என்ற பெருமை வேத வியாஸர் என்ற மகரிஷியை மட்டுமே சேரும்.

அவர் மகாபாரதம் என்னும் மகத்தான இதிகாசத்தை எழுதினார். அவைகள் ஒரு இலட்சம் செய்யுட்களுக்கு மேல் காணப்படுகின்றன. மேலும், அவரால் எழுதிய 18 புராணங்களை பார்த்தால் தலையே சுற்றுகிறது. அந்த அளவுக்கு ஆழமாக அனேக விஷயங்களை இன்றும் நம் வாழ்க்கைக்கு பொருந்துமாறு உள்ளதை காண முடிகிறது.

அத்துடன், இவர் எழுதிய பிரம்ம சூத்திரம் எனும் நூல் மிக உயரிய அறிவுப் பரிமாணத்தில் மனிதன் அடைய வேண்டிய அவனது சுய அறிவு நிலையை அனைவருக்கும் காட்டிக் கொடுக்கின்றது.

இன்று நாம் வேதங்கள், வேதாந்தம், புராணங்கள், மகாபாரதம், பிரம்மசூத்திரம் ஆகியவற்றை கேட்கவும், படிக்கவும் முடிவதற்குக் காரணம், அவர் மூலமாக, அவரது வழியில் வந்த அனேக குருமார்கள் வழையடி வாழையாக, இந்த குரு பரம்பரையைக் கொண்டு வந்து, இந்த ஞானம் இன்றும் எல்லோருக்கும் தொடர்ந்து கிடைக்கின்றது.

இது, நமது பண்டைய ரிஷிகளின் பாடங்கள் என்றாலும், இதை தனக்கே உரித்தான காப்புரிமை பற்றிய ஆசையின்றி, அனைவரும் ஒன்றே என்ற ஞானத்தால் பிறந்த கருணையாலும், தாராளத்தாலும் இன்று வரை எல்லோருக்கும் இந்த பாடங்கள் தொடர்ந்து கிடைத்து வருகின்றது.

இதில் இந்த பாடங்களை உபதேசிக்கும் குருவின் தகுதி என்ன?

ஒரு குரு அல்லது ஆச்சாரியர் என்பவர் வேதங்களைப் படித்து, அதன் வழியில் நிற்கின்ற ஸ்தோத்ரியன் பிரஹ்ம நிஷ்டணாக இருக்க வேண்டும்.

வேதத்தை மறுக்கின்ற பலரும் ஆச்சாரியர்கள் என்று தங்களைக் கூறிக் கொண்டாலும், அவர்கள் வெறும் உலகியல் கர்மங்களை மட்டுமே செய்துக் கொண்டு, இருமைகளில் இருக்கின்ற சாதாரண பாடங்களைப் படித்த ஆசிரியர்கள் என்றுதான் கூற வேண்டுமே தவிர, வேதங்களை முழுமையாகக் கற்றுணர்ந்த ஆச்சாரியர்கள் என்று கூறமுடியாது.

வேதத்தின் முழுமை என்பதே **"வேதாந்தம்"** படித்தால் மட்டுமே நிறைவு பெறும்.

ஒருவர் தன்னை, இந்த உலகத்தை மற்றும் என்னையும், இந்த உலகத்தையும் உண்டாக்கியவர் யார் என்ற கேள்வியை எழுப்பினால் மட்டுமே, அவன் மனிதன் என்று அழைக்கப்படுகிறான்.

இந்த கேள்விகள் எதுவும் எழாத நிலையில், இருந்துக் கொண்டு, மனம்போன போக்கில் போய்க் கொண்டு, இந்த வாழ்க்கையே இன்பம் என்று கருதிக் கொண்டு, வாழுகின்ற மட்டமான மனிதர்களைக் கண்டால், அவர்கள் மனித உடலில் இருக்கின்ற மிருகங்கள் என்றே பார்க்க வேண்டும்.

ஏனெனில், மிருகமும் ஒரு நாளும் இதுபோன்ற கேள்விகளை எழுப்பாது. கொடுக்கப்பட்ட வாழ்க்கையை அப்படியே வாழும், ஒரு நாளும் அதனிடம் சுய அறிவு வெளிப்படாது. அதனால், அதைப் போலவே, நல்லது – கெட்டதை சிந்திக்காமல், மனம் போன போக்கில் வாழுகின்றவர்களை மனிதர்கள் என்றும் கூற முடியாது என்கின்றது வேதம்.

அதனால், கல்வி என்பது மனிதனுக்கு மட்டுமே உரித்தானது என்பதை எந்த மனிதன் அறிந்துக் கொண்டு, அதற்கான அத்யாத்ம ஞானத்தை காட்டிக் கொடுக்கின்ற கல்வியைக் கற்றால், அவன் மனிதனில் புனிதன் ஆகின்றான் என்கின்றது அதே அத்யாத்ம ஞானம் கொடுக்கின்ற கல்வி முறைகள்.

ஆகவே, இந்த கல்வியைக் கற்றுக் கொள்ள வருகின்ற மாணவர்கள் சிஷ்யன் என்ற தகுதியில், இந்த உயரிய அத்யாத்ம ஞானப் பாடங்களைப் படித்து, சந்தேகம் தெளிந்து, அதன்பிறகு, அனைவருக்கும் இதை கொண்டு சேர்க்கும் ஆச்சாரியன் (குரு) என்ற நிலையை அடைகின்றான்.

இதற்கான குருகுலக் கல்வி மையங்கள் சென்றுதான் இந்தக் கல்வியைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது, இந்தக் காலத்தில் இல்லை.

ஏனெனில், என்று நாம் ஓலைச் சுவடியில் (Scripts) இருந்து தாள்களில் (Papers) இந்த பாடங்களைக் கொடுக்கும் நிலைக்கு முன்னேறி வந்துவிட்டோமோ? அதுப்போலவே, இன்றைய நவீன தொழில் நுட்பத்தின் உதவியால் உண்டாகியுள்ள நோட்புக் கம்ப்யூட்டர்களில் கூட இந்த பாடங்களைப் படிக்க முடியும் என்ற புதிய வளர்ச்சிப் பாதையை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

ஆகவே, இந்த பாடங்களைப் படிக்க முதல் தகுதி, இதைக் கற்றுக் கொள்ள வருகின்றவர்கள் முதலில் மாணவர்களாக (சிஷ்யர்களாக) மட்டுமே இருக்க வேண்டும். இந்தப் பாடங்களை சந்தேகம் இன்றி கற்றுக் கொண்ட பிறகுதான், இதை மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுக்கின்ற குருவாக (ஆச்சாரியராக) உயர வேண்டும்.

இன்றைய நவீன மெக்காலே கல்வி திட்டத்தில் கொடுக்கப்பட்ட ஆசிரியர்கள் பயிற்சி மையங்கள் போன்று, இந்த அத்யாத்ம ஞானப் பாடங்களை கற்றுக் கொடுக்க, அதற்கான ஆசிரியர் பயிற்சி மையங்கள் எதுவும் கிடையாது.

இந்த பாடங்களை கற்றுக் கொடுக்கும் ஆச்சாரியர் (குரு) ஆவதற்கு, ஒரே ஒரு தகுதி மட்டுமே உள்ளது.

அதுவே, அவர்கள் ஆசிரியருக்கு மாணவர்களாக இருப்பது மட்டுமே. அதாவது, ஒரு குருவுக்கு சிஷ்யர்களாக இருப்பது மட்டுமே ஆகும்.

அப்படி சிஷ்யன் ஆவது அவ்வளவு எளிதல்ல! – அதேசமயம், அதற்கான தகுதிகளை வளர்த்துக் கொண்டால் போதும், அந்த மாணவனும் ஒரு நாள் குருவாக முடியும். இதுவே, நமது பண்டைய பாரம்பரிய கல்வி முறை ஆகும்.

இந்த அத்யாத்ம ஞானப் பாடங்களைப் படிக்க வருகின்ற மாணவர்களிடம் (அதிகாரியிடம்) காண வேண்டிய கட்டாயமான நான்கு வழிமுறைகளை சாஸ்திரம் **"சாதன சதுஷ்டயம்"** என அழைக்கிறது.

அந்த நான்கு வழிமுறைகளை நடைமுறையில் கொண்டு வந்து வாழுகின்ற, இன்றைய மாணவன், இனிவரும் எதிர்கால மாணவர்களுக்கு ஆச்சாரியன் ஆகிறான்.

நன்றி

என்றும் அன்புடன்,

**ப்ரக்ஞன்.**

# சாதன சதுஷ்டயம்

"சாதன சதுஷ்டயம்" எனும் நான்கு விதமான சாதனங்களை **விவேகம், வைராக்கியம், சமாதி சட்க சம்பத்தி, முமுக்ஷுத்துவம்** என்று அழைக்கப்படுகிறது.

இதனை **"சாதன சதுஷ்டய சம்பத்தி"** என்றும் அழைக்கலாம்.

இதில், **"விவேகம்"** என்பது, ஒரு மனிதனுக்கே உரித்தான உயர்பரிமாண அறிவு நிலையில், இந்த உலக வாழ்க்கையில் எது நிலையானது? எது நிலையற்றது? என்பதனைப் பற்றி சிந்தித்து, அதனைப் பற்றிய சரியான புரிதல் உண்டாவதே ஆகும்.

அடுத்து, இந்த உலக சுகத்தின் மீதும், மறு உலகங்களான சொர்க்க லோகம், பித்ரு லோகம், பிரம்ம லோகம் போன்ற லோகங்களை அடைய வேண்டும், அங்கு சென்று சுகமாக இருக்க வேண்டும் என்ற அறியாமைகள் நிறைந்த மற்றவர்களால் ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களைக் கொண்ட ஆசைகளை அகற்றுவதே **"வைராக்கியம்"** ஆகும்.

இந்த வைராக்கியம் அடைவதே உண்மையான பற்றற்ற நிலை என்று கூறலாம். அத்துடன், மனவடக்கம், புலனடக்கம், தியாகம், பொறுமை, நம்பிக்கை, ஒருமுகப்படுதல் போன்ற ஆறு நற்பண்புகளை அடைவதே **"சமாதி சட்க சம்பத்தி"** எனப்படும்.

இறுதியில், மனிதனாகப் பிறந்தவன் அறம், பொருள், இன்பம், வீடு என்ற புருஷார்த்தம் காட்டும் வழியில், வீடுபேறு என்ற முக்தியை அடைய விரும்புகின்ற உத்தம சாதகனுக்கு உண்டாகும், உண்மையான ஆசையே **"முமுக்ஷுத்வம்"** எனப்படும்.

இதில், மூன்றாவதாக உள்ள **"சமாதி சட்க சம்பத்தி"** என்ற சாதனத்தில், அதன் உட்பிரிவுகளாக வருகின்ற ஆறு விதமான நற்பண்புகளைப் பற்றி, இனி விரிவாகக் காணலாம்.

சமஸ்கிருத மொழியில் '**சாதனம்**' என்றால், "**சாதனை அல்லது வழிமுறை**" என்று பொருள். அடுத்து, '**சதுஷ்டயம்**' என்றால், "**நான்கு**" என்று பொருள். அதன்படி, "**சாதன சதுஷ்டயம்**" என்றால், நான்கு விதமான சாதனைகள் என்று அழைக்கலாம்.

அவ்வாறே, '**சட்க**' என்றால், "**ஆறு**" என்று பொருள்படும். அதுப்போலவே, '**சம்பத்தி**' என்றால், "**செல்வம்**" என்றும் பொருள். அதாவது, நாம் அடைய வேண்டிய அரிதான ஆறு செல்வங்கள் என்னென்ன என்றால், அந்த ஆறு நற்பண்புகளை **சமம்** (மனக் கட்டுப்பாடு), **தமம்** (புலனடக்கம்), **உபரதி** (பற்று அறுத்தல்), **திதிக்ஷா** (சகிப்புத்தன்மை), **சிரத்தை** (நம்பிக்கை), மற்றும் **சமாதானம்** (மன ஒருமைப்பாடு) ஆகும். இந்த ஆறும் சேர்ந்து "சமாதி சட்க சம்பத்தி" என்று அழைக்கப்படுகின்றது.

ஆக, **விவேகம், வைராக்கியம், சமாதி சட்க சம்பத்தி, முமுக்ஷுத்துவம்** இந்த நான்கு நற்பண்புகளையும் மனிதனாகப் பிறந்தவர்கள் மட்டுமே அடைய முடியும்.

இவைகளில், முதலில், '**சமம் என்ற மனவடக்கம்**' மற்றும் 'தமம் என்ற புலனடக்கம்' ஆகிய இரண்டு பண்புகளைப் பற்றிக்காணலாம்.

இதிலே, சமம் என்ற மனவடக்கம் என்பது, சாஸ்திரம் விதித்த, விலக்கப்பட வேண்டிய வீணான விசயங்களை மனதால் நினைக்காமல் இருத்தல் ஆகும்.

ஒரு செயலைச் செய்யும் முன்னரே, அதன் அவசியம் கருதி, அவைகளை மனதிலிருந்து நீக்கி விடுதல் அவசியம் எனப்படுகிறது.

அத்துடன், பயனற்றப் பல விஷய, சுகங்களை சிந்திக்காமல் இருக்க, மனதைப் பழக்கப்படுத்தி வைத்திருக்க வேண்டும். எல்லா காலங்களிலும் மனதில் உதிக்கும் எண்ணப் பதிவுகளை எளிதாக விசாரித்துத் துறக்க வேண்டும்.

ஏற்கனவே, ஏற்றி வைத்துக்கொண்ட ஏராளமான எண்ணங்களின் விசயங்கள், கேட்டவைகள் நம்முடைய மனதில் எந்த முயற்சியும் இன்றி, எளிதாகப் பல எண்ணங்களாக பதிந்திருக்கும்.

அத்தகைய எண்ணங்களே எந்த நேரத்திலும் மனதில் எழுந்து, ஆசையைத் தூண்டி நம்மை செயலில் ஈடுபடுத்தும். அந்த செயலை செய்யும் முன்பு, அதன் சாதக, பாதக விஷய, சுகங்களை ஆராய்ந்து, அதன்பிறகு அவைகளை செய்வது நலம்.

அடுத்து, தமம் என்பது புலனடக்கம்

இதிலும், சாஸ்திரம் உபதேசித்த செய்யக் கூடாதவைகளை புலன்களினால் செய்யாதிருக்க வேண்டும். அதாவது தீய, பயனற்ற விசயங்களில் நம்மிடம் உள்ள பத்து புலன்களையும் பயன்படுத்தக் கூடாது.

அதாவது, ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள் என்ற பத்து புலன்களை நெறிப் படுத்துதல் தமம் அல்லது புலனடக்கம் என்று கூறப்படுகிறது.

உபரதி என்பது '**கர்ம தியாகம்**' எனக்கூறலாம்.

அதாவது, என்னால் மட்டுமே அனைத்தையும் சிறப்பாகச் செய்ய முடியும், என்னைப் போன்று மற்றவர்களால் சரியாகச் செய்ய முடியாது என்ற எண்ணத்தை விட்டு, நம்முடைய பொறுப்புக்களை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்து விடுதல் '**உபரதி**' எனப்படுகின்றது.

இதனால், வாழ்நாளில் கூடுதலான காலத்தை நாம் எடுத்துக் கொண்டு, காலன் வரும் முன்பு, நமக்கு மிகவும் பயனுள்ளதான சாஸ்திரத்தை கேட்பது, கேட்டவற்றை சிந்திப்பது, சிந்தித்தவற்றை நடை முறையில் கொண்டுவருவது போன்ற நற் காரியங்களில் ஈடுபட்டு, அதன் மூலமாக ஞானயோகத்திற்கு வர முடியும்.

அதாவது, மனவடக்கம், மற்றும் புலனடக்கம் என்ற பண்புகளால் மன அமைதியும், இந்திரியக் கட்டுப்பாடும் உண்டாவது போன்று, இந்த உபரதி என்ற நற்பண்பின் மூலம் தேவையற்ற பொறுப்புக்களை நம்முடைய தலையில் சுமப்பதை மற்றவர்களிடம் இறக்கிக் வைத்துவிட்டு, அதை தியாகம் செய்வதின் வாயிலாக, கிடைத்த கூடுதலான நேரத்தில் சாஸ்திர விசயங்களை கேட்பதையும், படிப்பதையும் தினசரி பழக்க, வழக்கமாக மாற்றிக் கொண்டு விட்டால், அதில் கூறப்பட்ட நற்பண்புகள் நம் நடைமுறை சுபாவமாகவே மாறி விடும். இதுவே "**உபரதி**" எனப்படுகின்றது.

அடுத்து, திதிக்ஷா என்ற சகிப்புத்தன்மை.

எதை சகித்துக்கொள்ள வேண்டும்?

அனைத்து வகையான துன்பங்களையும், நமக்கு வருகின்ற கஷ்டங்களையும் மனம் கோணாமல் சகித்துக் கொள்ளுதல் அல்லது பொறுத்துக் கொள்ளுதல். இதுவே நன்மையை தரக்கூடிய **"திதிக்ஷா"** என்று கூறப்படுகிறது. இது மங்கலத்தை அளிக்கக்கூடியது. இதையே, பெரியவர்கள் **'பொறுமை கடலிலும் பெரிது'** என்று கூறுவார்கள்.

அதாவது, நாம் விரும்பாமல், நமக்கு வருகின்ற துன்பங்களை பதட்டமின்றி, வெறுப்பின்றி, அமைதியாக ஏற்று, சகித்துக் கொள்வதையே **"திதிக்ஷா"** என்று அறிய வேண்டும்.

அதேசமயம், நமக்கு வருகின்ற துன்பங்களை நீக்கக் கூடிய முயற்சியையும் மேற்கொள்ள வேண்டும். அதைவிடுத்து, எனக்கு வருகின்ற துன்பத்தை சாஸ்திரம் பொறுத்துக் கொள்ளச் சொல்கின்றது. ஆதலால், நான் துன்பத்தை தாங்கிக் கொள்கின்றேன் என்று சும்மா இருப்பது என்பது, ஆறு அறிவு கொண்ட மனிதனுக்கு விவேகம் ஆகாது.

துன்பங்களை நீக்கிக் கொள்ள, மேற்கொண்ட முயற்சி வெற்றி பெற்றால், அதனால் சந்தோசம் அடையலாம். அதுவே செய்த முயற்சி தோல்வி அடைந்தால், அதை பொருட் படுத்தாது, சகிப்புத் தன்மையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சாஸ்திர பிரமாணத்தின் மீது நம்பிக்கை வருவதை சிரத்தா என்று கூறப்படுகின்றது. இதில், வேதாந்த சாஸ்திரம் முமுக்ஷுக்களுக்கு பிரமாணம் என்பதினால், வேதாந்த உபதேசங்களின் மீதும், அதை உபதேசிக்கின்ற குருவின்மீதும் நம்பிக்கை வருவதையே **"சிரத்தை"** அல்லது **"சிரத்தா"** என்று அழைக்கப்படுகிறது.

வேதாந்த சாஸ்திர பாடங்களைக் கேட்டு, அதன் உட்பொருளை மனம் எப்பொழுதும் ஒருமுகப்பட்டு, சிந்தித்தவாறு இருப்பதும், சிந்தித்த அந்த சத்தியத்தில் எப்பொழுதும் நிலைத்து நிற்பதை "**சமாதானம்**" என்பர்.

ஆகவே, வழிமுறைகள் தெரியாமல் யாரும், எந்த ஒன்றையும் எளிதாக இந்த உலகத்தில் அடைந்து, சாதித்து விட முடியாது. ஆதலால், இந்த நான்கு வழிமுறைகளையும் சாதனங்களாகக் கொண்டு, சரியாக வாழ முயற்சிக்கின்றவர்கள் சத்குருவின் சந்நிதியில் ஞனத்தை அடைவது நிச்சயம்.


எனவே, இந்த "**சாதன சதுஷ்டய சம்பத்தி**" என்ற இந்த நான்குவிதமான நற்பண்புகளையும் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய நடைமுறை வாழ்க்கையில் நன்றாகக் கடைப்பிடிக்கும் பொழுது மட்டுமே, அதன் பலனாக அடைய வேண்டிய ஆத்ம ஞானத்தை அடைந்து, அந்த ஆத்ம சொரூபமே தன் உண்மை சொரூபம் என்பதை உணர்ந்து, என்றென்றும், நிலையான அந்த ஏக அறிவாகிய சுய அறிவு பிரகாசிக்கக் கூடிய நிலையில் நித்யானந்தமாக வாழ முடியும்.

நன்றி!

ஓம் தத் ஸத்!

நிறைவு.

# குரு – சிஷ்ய பரம்பரை!



ப்ரக்ஞன்